வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
ந.க.எண்.1600/இ2/2019 நாள் .12.2019

---

பொருள் : பள்ளிக் கல்வி – தொடக்கப் பள்ளிகள் – சமூக நலத் துறை மற்றும் மதிய உணவு திட்டம் – SMS Based Monitoring System – பள்ளி தலைமை ஆசிரியர்கள் தினசரி உணவு உண்ணும் மாணாக்கர்களின் எண்ணிக்கை விவரத்தை குறுஞ்செய்தி அனுப்புதல் சில அறிவுரைகள் வழங்கதல் – சார்பு

பார்வை : 1. வேலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(சத்துணவு) அவர்களின் கடிதம் ந.க.எண்.1509/2017/பிஜி3, நாள்.12.12.2019.

---

வேலூர் மாவட்டம், மதிய உணவுத் திட்டத்தின் கீழ் பள்ளிகளில் மதிய உணவு வேளையில் மாணவர்களின் வருகையினை 100% உறுதி படுத்தும் வகையில் SMS Based Monitoring System-த்தைனை நடைமுறைபடுத்தப்பட்டது, சம்மந்தப்பட்ட தலைமை ஆசிரியர் மற்றும் பள்ளியின் உதவியாளர்/ஆசிரியர்கள் எவரேனும் ஒருவர் பள்ளி வேலைநாட்களில் காலை 10.00 மணிக்கு 155250 என்கிற எண்ணிற்கு குறுஞ்செய்தி மூலம்(SMS) அனுப்பும் திட்டம் இரண்டு வருடமாக செயல்பாட்டில் உள்ளது. வேலூர் மாவட்டம் 12.12.2019 அன்றைய குறுஞ்செய்தி SMS அறிக்கை புள்ளிவிவரம் 51 . 87% மட்டுமே குறைவாக பதிவாகி உள்ளது.

மேலும் குறுஞ்செய்தி அனுப்பும் பள்ளி தலைமை ஆசிரியர்கள் அலைபேசி(Vodafone Sim) பயன்படுத்தினால் SMS பதிவு ஏற்படாது என தெரிவிக்கப்படுகிறது. எனவே Vodafone Sim பயன்படுத்தும் தலைமை ஆசிரியர்கள் வேறோரு அலைபேசி கம்பெனி எண்ணை(Sim) பெற்று பதிவு செய்து 100% SMS அனுப்ப நடவடிக்கை எடுக்கமாறும், தினசரி மதிய உணவு உண்ணும் மாணாக்கர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மத்திய அரசு நிதி விடுவிக்கப்படுவதால் முழு அளவில் குறுஞ்செய்தி அறிக்கை அனுப்புவதன் அவசியம் பற்றி அனைத்து அனைத்து துவக்க/நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலர்களும் அனைத்து உயர்/மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்கள் தலைமையில் உடனடி ஆய்வுக் கூட்டம் நடத்தி மேற்கூறிய பொருள் தொடர்பாக துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என சார்ந்த மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

18.12

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

13/12/19

பெறுநர்

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்,வேலூர் மாவட்டம்.
2. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள்,வேலூர் மாவட்டம்.

நகல்

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(சத்துணவு)
வேலூர் மாவட்டம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

Scanned by CamScanner